ISSN:2582-9599



# சங்க காலத்திலும், இன்றைய காலத்திலும் விருந்தோம்பலின் மாண்பு

34

**த. மாதேஸ்வரி,**

**உதவிப் பேராசிரியை - தமிழ்த்துறை,**

**டாக்டர் ஆர்.ஏ.என்.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரி**

**ரங்கம்பாளையம். ஈரோடு**

**மின்னஞ்சல்:sivsudha027@gmail.com**

**ஆய்வுச் சுருக்கம்**

பண்டைத் தமிழர் இல்லங்களிலும், உள்ளங்களிலும் விருந்தோம்பல் மாண்பு சிறந்து விளங்கியிருந்தது. விருந்தினரை அகமும், முகமும் மரல வரவேற்று விருந்தளித்து சிறப்பித்தனர். திருமணம் செய்வதன் முக்கிய நோக்கமே "விருந்தோம்பல்" என்று பழந்தமிழ் இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

**திறவுச் சொற்கள்**

விருந்து, விருந்தினர், விருந்தோம்பல், முகம் மலர்தல், இனிய சொற்கள்.

**முன்னுரை**

"மருந்தே ஆயினும் விருந்தோடுண்" என்கிறார் ஔவையார். அதாவது நாம் உண்கின்ற உணவை புதிதாய் வருகின்றவர்களுக்கும் கொடுப்பது தமிழர்கள் பண்பு. "இட்டு கெட்டவர் யாரும் இல்லை" என்று கூறுவார்கள். சங்க இலக்கியங்களில் தொல்காப்பியம், நற்றினை, புறநானூறு, திருக்குறள் என பல நூல்கள் விருந்தோம்பல் பற்றி அழகாக கூறுகின்றன.

இக்கட்டுரையில் சங்க இலக்கியங்களில் பழங்காலத்தில், இன்றைய காலத்தில் விருந்தோம்பல் மாண்பினைக் காண்போம்.

**விருந்தோம்பல் என்பதன் பொருள்**

விருந்தோம்பல் என்பது பாதுகாப்பு மற்றும் உயிர்காத்தல் ஆகியவை தொடர்பாக இல்லாமல் நடத்தை முறைகள் மற்றும் உயிர்காத்தல் தொடர்பாக உள்ளது.

**விருந்தோம்பல் பண்பு குறித்து தொல்காப்பியம்**

விருந்தோம்பல் என்பது பெண்ணிற்குரிய கடமையாக இலக்கண, இலக்கியங்கள் கூறுகிறது. தொல்காப்பியர் பெண்ணிற்கு இலக்கணம் கூறுகையில் விருந்தோம்பல் பண்பாட்டையும் கூறியுள்ளார்.

"விருந்து புறந்தருதலும் சுற்றம் ஓம்பலும்
பிறவும் அன்ன கிழவோன் மாண்புகள்"

(தொல்காப்பியம்-பொருளதிகாரம் கற்பியல் 150:3-4)

விருந்தினரைப் பாதுகாத்தலும், சுற்றத்தாரைப் பாதுகாத்தலும், தலைவியின் பண்புகளாக தொல்காப்பியர் குறிப்பிட்டுள்ளார் என்பதனை அறிய முடிகிறது.

**நற்றிணை காட்டும் விருந்தோம்பல் பண்பு:**

விருந்தோம்பலில் மிக முக்கியமான பண்பு குறுமுறுவல் கொண்ட முகத்தோடு விருந்தினர்கு உணவு படைத்தாள். தலைவி எனப்பதனை,

"முறுவல் கொண்ட முகங்காண் அம்மே"

(நற்றிணை 120)

"விருந்து அயர் விருப்பொடு வருந்தினள்
முறுவல் இன்நகை காணகம்"

(நற்றிணை 81:3-4)

"அல்லி லாரினும் விருந்துவரின் வியக்கும்
முல்லை சான்ற கற்பின் தெளியிற் குறுமகள்".

(நற்றிணை 142-9-11)

இரவு நேரத்தில் விருந்தினர் வந்தாலும் முகம் சுழிக்காமல், இன்முகத்துடன் விருந்து கொடுக்கும் தலைவி என்று இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளது.

**புறநானூற்றில் முகம் மலர விருந்தோம்பல்**

சிறப்பு மிக்க அரசனாயினும் தம்மை நாடி வந்த புலவர்களை முகம் கோணாமல் விருந்தோம்புவது ஒரு சிறந்த பண்பாடாகப் போற்றப் பட்டுள்ளது. முகம்மாறி வரவேற்பின் கிடைத்தற்கரிய பொருள் கிடைப்பின் அதனைப் பெறமாட்டார்கள்.

களிறு முதலான பெறுதற்கரிய பரிசில்களை நீ எனக்குக் கொடுத்தாலும், தானாக உன் அகமும் மலர, குளிர, உவந்து மகிழ்வோடு கொடுக்கும் பொருளைத் தான் பெற்றுக் கொள்வேன். சற்றே முகம் மாறினாலும், நீ கொடுக்கும் பரிசு குன்றிமணியளவேனும் பெறமாட்டேன் என்று உறுதிபடத் தெரிவிப்பதை புறநானூற்றில் பெருஞ்சித்திரனார் குமணனுக்கு உணர்த்துகிறார்.

**திருக்குறள் கூறும் விருந்தோம்பல் பண்பு**

விருந்து கொடுப்பவரின் முகமானது மிக மலர்ச்சியுடன் எதிர் கொண்டு அழைத்து விருந்து கொடுக்க வேண்டும். எதிர் கொண்டு அழைப்பவர்களின் முகமானது சிறிது வாட்டத்துடன் இருந்தாலும் விருந்தினர் முகம் சட்டென்று அனிச்ச மலரைப் போல் வாடும் தன்மையுடையதாக மாறிவிடும்.

"மோப்பக் குழையும் அனிச்சம் முகம்திரிந்து
நோக்கக் குழையும் விருந்து"

(குறள் 86)

என்று குறள் கூறுகிறது.

**பரிமேலகழர் உரை**

இந்தக் குறளும் பரிமேலழகர் சொல்லும் உரை தொலைவில் வரும் போதே விருந்தினை

வரவேற்கிறோம் என்ற பொருளில் இன்முகம் காட்ட வேண்டும். அருகில் வந்த போது, அவர்கள் மனம் குளிர இன்சொல் சொல்லி வரவேற்க வேண்டும். பின் அவர்களுக்கு அன்போடு விருந்து உபச்சாரம் செய்ய வேண்டும் என்கிறார்.

**பண்டைய தமிழர்களும் விருந்தோம்பலும்**

"விருந்தோம்பல் ஓம்பா மடமை மடவர்கள் உண்டு" என்கின்றனர். அந்தளவிற்கு விருந்தோம்பலை தமது பாக்கியமாக கருதியவர்கள் தமிழர்கள். மேலும் சங்க இலக்கியங்களிலும் எட்டுத்தொகை நூல்களான அகநானூறு, புறநானூறு ஆகிய நூல்களில் விருந்தோம்பலின் சிறப்பு தொடர்பாக அதிகம் பேசப்படுகிறது, தமிழர்களின் விருந்தோம்பல் பழக்க வழக்கத்தோடு பல அறிவியல் விடயங்களும் காணப்படுகின்றன.

நம் வீடுகளுக்கு வரும் விருந்தாளிகளை வாசல் வரை சென்று இன்முகத்துடன் வரவேற்று கைகால்களை கழுவ வைத்து அவர்களை இன்சொல் பேசி நலம் விசாரித்து முதலில் பருக குடிபானங்கள் வழங்குதல், இனிப்புகளை வழங்குதல் இயல்பான உபசரிப்பு முறையாகும்.

பின்பு அவர்களுக்கு உணவு சமைத்தல், விருந்து பரிமாறுதல் வாழையிலையில் முறையாக உணவுகளை வைத்து ஒரு குவளையில் நீரும் திசைபார்த்து அமர்ந்து உணவினை உண்டு முடித் தும் அந்த இலையினை உபசரித்தவர்களே எடுத்து முடித்தவுடன் அவர்களுடன் அன்பாக உரையாடி வாசல் வரை சென்று வழியனுப்பி வைப்பார்கள்.

அந்த அளவிற்கு விருந்தினர்களை அன்பாக கவனித்து வழியனுப்புவது தமிழர்கள் பண்பாடாகும். இது தமிழர் விருந்தோம்பல் பண்பாட்டின் ஒரு பகுதியாகும். இன்னும் பல விடயங்கள் விருந்தோம்பலின் மாண்பையும் பெருமையையம் பறைசாற்றுகின்றன.

**இன்றைய நிலை**

இதுகாறும் கூறிய செய்திகளின் வழி விருந்தோம்பல் என்பது பழந்தமிழரின் பண்பாட்டு முறை என்பதும் அது தொன்று தொட்டு பாதுகாக்கப்பட்டு வந்ததையும் அண்மைக்காலம் வரைக் கூடக் கண்ணாரக் காண முடிந்தது. ஆனால் கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறையிலிருந்து தனிக்குடித்தன வாழ்க்கை முறைக்கு இத்தலைமுறையினர் என்று மாறத்தொடங்கினார்களோ அன்றே விருந்தோம்பும் தமிழ்ப்பண்பும் அருகிப் போய்விட்டது என்பது வருந்தத்தக்கது.

**முடிவுரை**

"செவ்விருந்து ஓம்பி வருவிருந்து பாரத்திருப்பான்
நுல்விருந்து வானதவர்க்கே"

என்கிறது திருக்குறள்.

அதாவது வந்த விருந்தினர்களை அன்பாக கவனித்து அனுப்பி விட்டு வருகின்ற விருந்தினர்களுக்காக வாசலில் காத்திருந்தவர்கள் நம் முன்னோர்கள். இத்தகைய பெருமைகள் உடைய இனத்தில் பிறந்த நாம் பெருமைக்குரியவர்கள். எம் பண்பாடு, எம் கலாச்சாரம், எம் பழக்கவழக்கங்கள் என்றைக்கும் மங்காதவை. இவற்றை நாமும் பின்பற்றி வாழ்வதே சிறப்பானதாகும்.

**அடிக்குறிப்பு**

1. இளம்புரணர் (உ.ஆ.) தொல்காப்பியம் -பொருளதிகாரம், சௌரா பதிப்பகம், சென்னை – 17 (பதி. 2017)
2. குரு நாதன் (ப.ஆ.) புறநானூறு மூலமும் உரையும், வடிவேல் பதிப்பகம், தஞ்சாவூர் – 4 (பதி – 2003)
3. பரிமேலழகர் (உ.ஆ.) திருக்குறள் , சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சென்னை – 1975.
4. கதிர் மகாதேவன் (உ.ஆ.) நற்றிணை, முல்லை பதிப்பகம், சென்னை. (பதி. 2012)
5. ஸ்ரீ சந்திரன் .ஜெ – பதினெண் கீழ்கணக்கு நூல்கள் தொகுதி – 1,2,3 – தமிழ் நிலையம் - சென்னை 2007